# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

மனு எண் : 0365 / 2017 / ஊராட்சி

ஆணை எண் : 057 / 2017

நாள் : 27.03.2017

திரு. G. கணேசன்,
339 A. வ.உ.சி நகர் மையப்பகுதி,
6-வது குறுக்கு தெரு, சமுசிகாபுரம் அருகில்,
இராஜபாளையம் - 626 102. — மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
இராஜபாளையம். — எதிர் மனுதாரர்

## ஆணை

இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், சமுசிகாபுரம் ஊராட்சி, 339A வ.உ.சி. நகர் மையப்பகுதியில் வசிக்கும் திரு. G. கணேசன், அவருடைய 15.03.2017 நாளிட்ட மனுவில், சமுசிகாபுரம் ஊராட்சியில் முதல் கட்டமாக ரூபாய் இரண்டு லட்சம் செலவில் 350 அடி நீளத்திற்கு நகரின் மேற்பகுதியில் வாறுகால் அமைக்கப்பட்டது என்றும், இரண்டாம் கட்டமாக உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2015-16ன் படி, ரூபாய் 10 லட்சம் செலவில் வாறுகால் அமைக்கும் பணிமேற்கொள்ளப்பட்டதில் கீழ்கண்ட முறைகேடுகள் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்:-

(1) வாறுகால் கட்டும்போது வாட்டம் சரியாக பார்க்காததால், ஆங்காங்கே மேடு பள்ளங்கள் ஏற்பட்டு கழிவு நீர் தேங்கி கொசு உற்பத்தியாகிறது. துர்நாற்றமும் வீசுகிறது.

(2) வாறுகால் கோணல்மாணலாக அமைக்கப்பட்டதால், தென்வடல் பிரதான தெருவின் அகலம் 2 அடி வரை குறுகிவிட்டது.

(3) 2-வது குறுக்கு தெருவிலிருந்து தென்புறத்தில் மட்டத்தை தேவைக்கு அதிகமாக உயர்த்தியதால் வாறுகால் பயனற்று உள்ளது.

(4) பக்க சுவர் உயரமாக கட்டப்பட்டுள்ளதால், மழைநீர் வாறுகாலில் வடியாமல், சாலையிலேயே தங்கி, மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியும் தக்க நடவடிக்கை எடுக்காத, இராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் இதற்கு பொறுப்பேற்று குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

2. 2014 – ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு"என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இன்று வழங்கப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
திரு. G. கணேசன்,
339 A, வ.உ.சி நகர் மையப்பகுதி,
6-வது குறுக்கு தெரு, சமுசிகாபுரம் அருகில்,
இராஜபாளையம் - 626 102.

நகல்
மாவட்ட ஆட்சியாளர்,
விருதுநகர் மாவட்டம்.